# பழைய ஏற்பாட்டை சுவிசேஷ புத்தகங்களோடு தொடர்புபடுத்துதல் - பாகம் இரண்டு
# CONNECTING THE OLD TESTAMENT TO THE GOSPELS - PART II

**அறிமுகம்**

முந்தைய பாடங்களின் சுருக்கமான விவரத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவலுக்கும், மத்தேயு, மாற்கு, லூக்கா புத்தகங்களில் இயேசு இஸ்ரவேலுக்கு செய்த போதனைக்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்துவதே இப்பாடத்தினுடைய இரண்டாம் பாகத்தின் நோக்கமாகும். யோவான் சுவிசேஷ புத்தகத்தின் முன்னுரையிலிருந்து முக்கியமான விஷயங்களை பின்வருமாறு பார்க்கலாம். தயவு செய்து இரண்டு பாகங்களாக அமைந்துள்ள இந்த பாடத்தின் முதல் பாகத்தை திரும்பவும் பாருங்கள்.

1. "அவருக்குள் (இயேசு) ஜீவன் இருந்தது; அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது." *யோவான் 1:4.* மனுக்குலத்தை சார்ந்த யாவருடைய ஆவிகளுக்கும் ஜீவனுடைய ஆவியின் பிரமாணமாக இருப்பது இயேசுவின் வாழ்க்கையாகும். நமது ஆவிகள் தேவனிடமிருந்து வந்தவைகளாகவும், அவருடைய சாயலின்படி வடிவமைக்கப்பட்டவைகளாகவும் இருப்பதால் இயேசு கிறிஸ்து இந்த சத்தியத்தை வெளிப்படுத்தினார். *ரோமர் 8:1,2.* இந்த சத்தியம் சிறு பிள்ளைகளிடத்தில் தெளிவாக தெரிகின்றது. *யோ. 18:37.* இயேசுவின் வாழ்வும் போதனைகளுமே புதிய உடன்படிக்கையின் பிரமாணங்களாயிருக்கின்றன. *எபிரெயர் 8:10-12.* கிறிஸ்தவர்களாகிய நம்முடைய இதயங்களிலும், மனங்களிலும் இந்த பிரமாணங்கள் பதிந்து விடுவதால் இயேசுவின் சாயலுக்கு நாம் ஒப்பாகின்றோம். *ரோ. 8:29.* "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே





பாவம்." *1 யோவான் 3:4.* வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், நமது வாழ்வின் எந்த ஒரு பகுதியாவது இயேசுவின் வாழ்க்கையோடும், அவருடைய போதனைகளோடும் பொருந்தவில்லையென்றால், அது பாவமாயிருக்கிறது என்று அர்த்தம். விசுவாசத்தினால் நீதிமான்கள் ஆக்கப்படுவதால், கிறிஸ்தவர்கள் மறுபடியும் பிறந்து, தேவனுடைய சமாதானத்தோடு வாழ்க்கையை தொடருகிறார்கள். *ரோமர் 4:25-5:1.*

2. "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்." *யோவான் 1:12,13.* பார்க்கவும் *யோவான் 3:3-8.* சிலுவையின் மீது நமக்கு இருக்கிற விசுவாசத்தினால் நாம் பெற்றுக்கொள்ளுகின்ற ஜீவனையும், கிருபையையும் பற்றிய சத்தியத்துக்கு இயேசுவே ஊற்றாக இருக்கிறார் என்பதை தான், "இயேசுவில் விசுவாசமாய் இருப்பது" என்ற வார்த்தைகள் அர்த்தப்படுத்துகின்றன. இயேசுவானவர் சிலுவையில் நமக்காக மரித்ததன் பலனாக பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணக்கூடிய தகுதி நமக்கு கிடைத்துள்ளது. நமக்குள் வாசம்பண்ணுகிற அவர், தேவனுடைய பிள்ளைகள் என்ற கெம்பீரமான நமது அடையாளத்தை பற்றி சாட்சியும் கொடுக்கிறார். அவர் நமது ஆவிகளைக் குறித்துதான் இவ்விதமாக சாட்சி கொடுக்கிறார். பார்க்கவும் *யோ. 7:37-39; ரோமர் 8:16; 1 யோவான் 3:1.* "தேவனுடைய பிள்ளைகள்" என்ற அடையாளத்தையும், பரிசுத்த ஆவியானவர் உடனான

ஐக்கியத்தையும் அனுபவித்து மகிழ்கின்ற கிறிஸ்தவர்கள் எவர்களோ, அவர்கள் உள்ளத்தில் இருந்து தான், இயேசு இங்கு குறிப்பிடுகின்ற "ஜீவத் தண்ணீருள்ள நதிகள்" ஓடிவரமுடியும். நம்மை சோதித்து பார்ப்பதற்கும் மற்றவர்களை நாம் சோதித்து பார்ப்பதற்கும் நமது அடையாளமே மாதிரியாக அமைந்துள்ளது. இது நமது பிதாவுடைய உலகம். இந்த அடையாளத்துடன் ஒவ்வொரு காலையும் எழும்புவது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்!

3. "எப்படியெனில், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின." *யோவான் 1:17.* இயேசுகிறிஸ்து மனுக்குலத்துக்காக இந்த பூமிக்கு வந்ததற்கு முக்கிய காரணம் யோவான் குறிப்பிடுகின்ற இந்த கிருபைதான் என்று பல நூற்றாண்டுகளாக பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. சிலுவையை தங்கள் மார்க்கத்தின் அடையாளமாக பக்தியுள்ள அநேக குழுக்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. மனித குலத்துக்கு கிருபையை அளிக்கும்படி தம்முடைய குமாரன் மரிக்கவேண்டும் என்பது இந்த உலகத்தை படைத்ததற்கான தேவனுடைய **நோக்கமல்ல**, மனித குலத்தை தேவன் ஏன் படைத்தார் என்பதை பற்றிய சத்தியம் என்ன? தேவனை தங்கள் பிதா என்று கிறிஸ்தவர்கள் ஏன் அழைக்கிறார்கள்? ஜீவனைக் குறித்த சத்தியம் என்ன? தேவனுடைய பிள்ளைகள் ஆவதைப் பற்றி இயேசு கிறிஸ்து விளக்கிச் சொல்லவோ, போதிக்கவோ இல்லையா? அநேக கிறிஸ்தவர்கள் இதற்கு "ஆம்" என்று தான் பதில் சொல்லுவார்கள். "கிறிஸ்தவ சமுதாயம்" என்று அழைக்கப்படும் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தேவன் மனித குலத்தை படைத்ததற்கான விசேஷித்த நோக்கத்தை தவிர்ப்பதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். ஒரு வேளை, நமது ஆவிகளின் வாழ்வைப் பற்றிய





சத்தியமானது, வாழ்க்கையைப் பற்றி இயேசு அறிவித்த சத்தியத்துக்கு நம்மை அர்ப்பணிக்கும்படி நிர்ப்பந்தத்தை உண்டாக்குவதே அந்த விசேஷித்த நோக்கத்தை இவர்கள் தவிர்ப்பதற்கு காரணமாக இருக்கலாம். மாபெரும் கூட்டமாக இருக்கின்ற இவர்கள் இயேசுவைப் போன்ற புதிய குணங்களை உடையவர்களாய் இருந்து அவரைப்போல செயல்படும்படி, தங்களுடைய பழைய மனிதனை களைந்து போட்டு அவருடைய சிலுவையை சுமந்து செல்வதற்கு விரும்புவதில்லையா? பார்க்கவும் *லூக்கா 9:57-62; எபே. 4:20-24; எபி. 12:4-14.*

மார்க்கத் தலைவர்கள் சமுதாய சங்கங்களை உருவாக்கி, அதற்கு பக்தி சாயம் பூசி, தங்கள் குழுக்களில் மக்கள் எண்ணிக்கையை அதிகரிக்கும்படியாக அவைகளை சபைகள் என்று அழைக்கிறார்கள். இந்த விதமான மார்க்கம் தவறு என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எச்சரித்தான். *2 தீமோத்தேயு 3:1-9.* தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கும்படியாகவும், பாவத்திற்கான பலியாக தம்மையே செலுத்தும்படியாகவும், தாம் வந்திருப்பதாக இயேசு சொன்னார். *லூக்கா 4:43; யோவான் 12:27.* தேவனுடைய நோக்கத்தையும், ஜீவனையும் குறித்த சத்தியத்தை ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? *2 தீமோத்தேயு 1:9*. சிருஷ்டிப்பைப் பற்றிய தம்முடைய நோக்கத்தையும், தமக்கு உகந்த வாழ்க்கையைப் பற்றிய விளக்கத்தையும் வெளிப்படுத்தும்படி கிறிஸ்துவை அவர் அனுப்பினார். இந்த சத்தியத்திற்கு கிருபை உறுதுணையாயிருக்கிறது; இருப்பினும், ஜீவனைப் பற்றிய சத்தியமாயிருப்பது கிருபையல்ல. தமது நித்திய ராஜ்யத்தில் பிள்ளைகளை ஏற்படுத்த வேண்டுமென்பது தேவனுடைய நோக்கமாகும். மேலும் ஒரு தேவனுடைய பிள்ளையின் வாழ்க்கை எப்படியிருக்க வேண்டுமென்பதை காண்பிப்பதற்காக இயேசு கிறிஸ்து முதல் முறை வந்தார். கிறிஸ்தவர்கள்

தேவனுடன் ஜீவ ஒளியில் நடக்கும்படியாக அவரிடத்தில் சமாதானம் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற பணியை மாத்திரமே கிருபை செய்கிறது. *1 யோவான் 1:5-8.* வேத வசனங்களில் மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட நியாயத்தீர்ப்புக்கும், கிருபை என்ற வார்த்தைக்கும் சம்பந்தமிருப்பதாக நாம் பார்க்கமுடியாது.

யோவானுடைய முன்னுரையில் நாம் கற்றுக்கொண்ட சத்தியம் இதுதான். இந்த புத்தகத்தில் ஒன்று முதல் நான்கு வரையிலும் அமைந்துள்ள பாடங்களோடு இது நெருக்கமான தொடர்புகொண்டுள்ளது. **கிறிஸ்தவர்கள் கேள்விப்பட்டு, புரிந்துகொண்டு, நம்பி, விசுவாசிக்கின்ற சத்தியமானது ஜீவப்பிரமாணமாயிருக்கின்றது.** ஜீவப்பிரமாணம் என்ற தலைப்பை நாம் "விட்டுவிட்டு" வெவ்வேறு விஷயங்களுக்குத் தாவி சென்றுவிட்டால், பழைய ஏற்பாட்டில் தொடங்கி, புதிய ஏற்பாட்டில் முடிவடைகின்ற நம்முடைய வேதபாடம் வெற்றிகரமாக அமையாது. நாம் ஒவ்வொருவரும் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது: "என்னுடைய ஆவியின் ஜீவனைப்பற்றி புரிந்துகொள்வதற்கு இயேசுவே ஒளியாயிருக்கிறார் என்று நான் நம்புகிறேனா?" புதிய உடன்படிக்கையின் ஜீவப்பிரமாணத்தின் மீது கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை வைக்கும்படி முடிவு செய்யாவிட்டால், அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படாது. நாம் தனிப்பட்ட முறையில் வேதத்தை கற்றுக்கொள்வது நமது விசுவாசத்திற்கு ஊற்றாக அமைகிறது. நமது தனிப்பட்ட விசுவாசமே, நமது "உள்ளான மனிதர்களின்" ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பதாக அமைந்துள்ளது. எதன் மீது நமக்கு விசுவாசம் இருக்கின்றதோ, அதில் நாம் வளர்ச்சிப்பெற வேண்டும். **தேவனுடைய ராஜ்யத்தில் அதற்கு உகந்த வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் வாழக் கூடிய ஒரு மனிதனாக கிறிஸ்தவன் வளர்ச்சிப் பெறுவதற்கு அந்த ராஜ்யத்தில் அவனுக்கிருக்கின்ற பங்கைப்பற்றிய விசுவாசமே அவனுக்கு ஊக்கமளிக்கிறது.**





நமது ஆவிகளின் ஜீவனைப்பற்றிய இந்த சத்தியத்தை, நமது மனங்களில் நீண்ட கால நினைவுகளுக்கு என்று உள்ள இடங்களில் சேமித்து வைத்துக்கொண்டால் தான், மத்தேயு, மாற்கு, லூக்கா புத்தகங்களில் தேவனுடைய ராஜ்யத்தை பற்றிக் காணப்படும் போதனைகளை நம்மால் புரிந்துகொள்ளமுடியும். "ஜீவப் பிரமாணத்தை" பற்றிய அறிவில்லாமல், இயேசு சொன்ன உவமைகளை புரிந்துகொள்ள முடியும் என்பது முட்டாள்தனமாகும். *மத்தேயு 13:11-17.* நமது சரீரங்களை பற்றிய சத்தியமாக இயற்கை நியதி இருப்பதுபோலவே நமது "உள்ளான மனிதர்களைப்பற்றிய" சத்தியமாக ஜீவப்பிரமாணமிருக் கின்றது. ஜீவப்பிரமாணம் இயற்கை நியதி வகையை சேர்ந்தது. நமது சரீரங்களைப் பற்றிய காரியங்களில் இயற்கை நியதியின்மீது எந்த அளவுக்கு நாம் விசுவாசம் வைத்திருக்கிறோமோ அதே அளவு விசுவாசத்தை "ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின்" மீதும் வைக்கவேண்டும். ஒத்த அமைப்புக்கொண்ட சுவிசேஷ புத்தகங்களை ஆராய்கிற போது மாத்திரமல்ல, புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களையும் ஆராய்கிறபோதும், இந்த விஷயங்களையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் நாம் ஆராயவேண்டும். இயேசு ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தைப் பற்றி தம்முடைய சீஷர்களுக்கு போதிக்க வேண்டுமென்பதற்காக இயற்கையின் நியதிப்பற்றிய விஷயத்தில் அவர்களுக்கு இருந்த அறிவை பயன்படுத்தினார். அவருடைய உவமைகளுக்கு இதுவே முக்கிய அம்சமாக அமைந்தது; மாம்சத்திற்குரிய விஷயங்களில் அவர்களுக்கு நன்றாக தெரிந்திருந்தவைகளை வைத்தே அவர் தமது உவமைகளை சொல்லத் தொடங்கினார். இயற்கை நியதியோடு சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டு "ராஜ்யம் இது போல" இருக்கிறது என்று அவர் சொல்லுவார். தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றை தெரிவிக்கும் இந்த முறையிலேயே – தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றி அவர் போதித்து வந்தார். பின்வரும்

எண்ணங்களுக்கு ஆதாரமாக கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை தயவு கூர்ந்து ஜாக்கிரதையாக வாசியுங்கள்.

**பாடம்**

நான்கு சுவிசேஷ புத்தகங்கள் வழியாகவும் தேவன் நமக்கு தெரியப்படுத்துகிற விவரமானது, லேவிய ஆசாரியத்துவ காலத்தை சேர்ந்தது. இது ஒரு கதைப்போல அமைந்திருப்பதால், இதே தலைப்பிலுள்ள பாடத்தின் முதல் பாகத்தில் நான்காவது பத்தியில் இடம் பெற்றுள்ளவைகளும் ஒரு தனி நபர் பற்றிய விவரிப்பினை வாசிப்பதற்கு பயன்படுத்த வேண்டியவைகளுமான கொள்கைகளின்படி வாசிக்க வேண்டும். இந்த விவரிப்பில் தேவன் முக்கியமானவராயிருக்கின்றார். பல நூற்றாண்டுகளாக ஆபிரகாமின் சந்ததியைப் பயன்படுத்தி அவர் செய்து வந்த பொறுமையான வேலையின் பலனை அறுவடை செய்துவரும்படி அவர் தமது குமாரனை அனுப்பினார். இந்த சோகமான கதையை தேவனுக்குரிய வல்லமையான செய்தியுடன் ஒரு உவமை வடிவத்தில் இயேசு தெரிவித்தார். *மத்தேயு 21:33-46.* தேவனுடைய ராஜ்யம் மாம்சத்திற்குரிய இஸ்ரவேலரிடமிருந்து நீக்கப்பட்டு, இயேசு தமது பிதாவுக்காகக் கட்டியதும், ஆவிக்குரிய இஸ்ரவேலாயிருக்கின்றதுமான சபைக்குக் கொடுக்கப்படும். தேவன் சம்பந்தப்பட்டுள்ள இந்த கதையில் சாத்தான் எதிராளியாக இருக்கின்றான். “இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே” வந்திருந்த இயேசு, தமது ஊழியத்தை ஆரம்பித்தவுடனே சாத்தான் வெளிப்படையாக தன் எதிர்ப்பை தெரிவித்தான். பார்க்கவும் *லூக்கா 19:10; மத்தேயு 4:1-11; லூக்கா 4:1-13.* தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து இஸ்ரவேலுக்கு போதிப்பது இயேசுவினுடைய ஊழியமாயிருந்தது; இதுவே இக்கதையின் கருப்பொருளாயிருக்கின்றது. இந்த கதையையும், இயேசுவின் போதனைகளையும், நான்கு சுவிசேஷ புத்தகங்களின் எழுத்தாளர்கள் சபைக்கு நன்மையுண்டாகும்படியாக பிற்காலத்தில் தெரியப்படுத்தினார்கள்.





“கிறிஸ்துவுக்குள்ளான” தேவனுடைய ராஜ்யத்திற்கென்று சபையானது கனி கொடுக்கும்படியாக இந்த எல்லா தகவலையும் அது தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாயிருந்தது. இந்த காரணத்திற்காக தான் தேவனுடைய ராஜ்யத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டு இயேசுவுக்கு ஒரு ராஜ்யம் கொடுக்கப்பட்டது. *மத்தேயு 22:1-14* வசனங்களில் உள்ள உவமையின் மூலமாக தற்போதைய சூழ்நிலையை இயேசு வெளிப்படுத்துகிறார். எல்லா தேசங்களிலிருந்தும் நித்திய கனியை கொண்டுவரும்படிக்கு தேவன் தமது குமாரனைப் பயன்படுத்துவதை நாம் இங்கு பார்க்கிறோம். சுவிசேஷ புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளபடி கனி என்ற வார்த்தையின் “அடிப்படை” அர்த்தம் என்னவென்றால், “தேவனுடைய பிள்ளைகள்” என்பது தான். பார்க்கவும் *லூக்கா 3:7-9.* நீதியின் வாசஸ்தலமாயிருக்கின்ற தேவனுடைய ராஜ்யத்தின் கலாச்சாரத்திற்குப் பொருத்தமான வாழ்க்கையை கிறிஸ்தவர்கள் வாழ்வதின் மூலமாக பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கின்றார்கள். *மத்தேயு 6:20; 2 பேதுரு 3:13.*

மனிதகுலம் “நன்மை தீமை” அறியக்கூடிய திறமையை பெற்றுவிட்டதினால், சாத்தான் எல்லா மனிதர்களுடைய வாழ்க்கையிலும் தன்னுடைய தீய செல்வாக்கைப் பயன்படுத்தி யாவரையும் தீமை செய்யவைக்கின்றான். ஆதாமுக்குள் “மனுஷகுமாரனாக” இந்த பூமிக்கு வந்திருந்த தேவகுமாரனை பாவம் செய்ய வைத்துவிடமுடியுமென்று சாத்தான் உறுதியாக நம்பினான். பார்க்கவும் *யோவான் 3:13; மாற்கு 1:1; 2:8-12.* இயேசு ஊழியம் செய்துகொண்டிருந்தபோது, ஒரு சமயத்தில், அவர்களை அவர் நோக்கி: “சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்” என்று சொன்னார். *லூக்கா 10:18; 1 பேதுரு 5:8; வெளி. 12:7-17.* இந்த உலகத்தில் சாத்தான் இருக்கிறான் என்பதை மிக எளிதாக நாம் கண்டுகொள்ள முடியும். காலையில் செய்தித்தாளை வாசியுங்கள் அல்லது செய்திகளை பாருங்கள்,

அப்பொழுது உங்களுக்குப் புரியும். நசரேயனாகிய இயேசுவை தீமை செய்ய வைக்கும் முயற்சியில் சாத்தான் தோல்வி அடைந்த பிறகு, "மனுஷகுமாரனாக" இஸ்ரவேலில் வாழும்படி வந்த "தேவ குமாரனுடைய" போதனைகளை எதிர்க்கும்படியாக இஸ்ரவேலருடைய பெலவீனத்தையும் பரிசேயர்களையும் அவன் பயன்படுத்திக்கொண்டான்.

இஸ்ரவேல் தேசத்தில் தேவனுடைய ராஜ்யத்தை நிலை நிறுத்தும்படியாக அவர் தீர்க்கதரிசிகளை பயன்படுத்தியதை பற்றி தெரிவிக்கின்ற விவரத்தின் தொடர்ச்சியாக சுவிசேஷ புத்தகங்கள் அமைந்துள்ளன. யோவான்ஸ்நானன் ஒரு தீர்க்கதரிசியாய் வந்தான். "நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன் தான்'' என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொன்னார். *மத்தேயு 11:14.* தேவனுடைய குமாரன் மற்றொரு தீர்க்கதரிசியா யிருந்தார். *அப்போஸ்தலர் 3:22.* இயேசு இஸ்ரவேலிடம் தமக்காக பேசாமல் தேவனுக்காக பேசினார். *மத்தேயு 11:25-27; யோ. 7:16-18.* அவர் இஸ்ரவேல் தேசத்துக்கு கடைசியாக தமது செய்தியை அறிவிக்கும்படி இயேசுவை தீர்க்கதரிசியாக அனுப்பினார். ஒன்பதாவது பாடத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய தேசம் இதுதான். மரியாள் என்ற கன்னிகைக்கு இயேசு மகனாக பிறந்திருந்த காலத்தில், அவருடைய தேசம் மீண்டும் ஒருமுறை அடிமைத்தனத்தில் அகப்பட்டிருந்தது. பார்க்கவும் *மத்தேயு 1:18-23; லூக்கா 1:26-38.*

இயேசு பூமிக்கு வருவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பாகவே, பத்துக் கோத்திரங்களையுடைய இஸ்ரவேல் என்ற அடையாளம் சரித்திரத்திலிருந்தே காணாமற்போயிருந்தது. பத்தாம் பாடத்தை பார்க்கவும். தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டிருந்தபடி யூதா அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்தது. அவர்களுக்கு பயன்படும்படி ஒரு தேவாலயத்தை எருசலேமிலே தேவன் கட்டினார். *எஸ்றா 6:3-5.* அவர்





எருசலேமுக்கு திரும்பக் கொண்டுவந்த யூதர்களுக்கென்று பெரிய திட்டங்களை வைத்திருந்தார். அவருடைய மக்கள் அடிமைத்தனத்தில் இருந்த சூழ்நிலையில் சகரியா தீர்க்கதரிசியிடம் தமது செய்தியை கொடுத்து தம்முடைய ஜனங்களுக்கு தெரிவிக்கச் சொன்னார். தயவுகூர்ந்து இந்த செய்தியை பாருங்கள். சகரியா தீர்க்கதரிசி மூலமாக தேவன் தமது மக்களுக்கு தெரிவிக்கின்ற செய்தி மாம்சத்திற்குரிய யூதேயாவுக்கு அப்பாற்பட்டு இருப்பது போல் தெரிகிறது.

*"அப்பொழுது அவர் : செருபாபேலுக்குச் சொல்லப் படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தி னாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல,* ***என்னுடைய ஆவியினாலேயே ஆகும்*** *என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார். பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டது; அவன் கைகளே இதை முடித்துத் தீர்க்கும்; அதினால் சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினா ரென்று அறிவாய்." சகரியா 4:6-9.*

தேவன் சாலொமோனைக் கொண்டு கட்டியிருந்த முதல் ஆலயத்தை போன்று சிறப்பானதாக இந்த ஆலயம் இல்லாதிருந்த போதிலும் அதே நோக்கத்துக்காகவே இதுவும் கட்டப்பட்டது. *எஸ்றா 3:12; 6:15-18.* நான்கு நூற்றாண்டுகள் கழித்து ராயனுடைய ஆசீர்வாதத்தோடு ஏரோது இஸ்ரவேலின் மேல் ராஜாவானான். ஏரோது மரணமடைவதற்கு முன்பு தேவாலயத்தில் சில மாற்றங்களை செய்தான்.

*மத்தேயு 2:19;24:1,2; யோவான் 2:20.* "தேவனுடைய ராஜ்யம்" என்ற தலைப்பிலுள்ள என் புத்தகத்தில் நான்காம் பாகத்தில் "தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட ராஜ்யமும் உலக சரித்திரமும்" என்ற முதல் பாடத்தில் தானியேல் காலந்தொடங்கி இயேசு கிறிஸ்துவின் காலம் வரையிலும், வேதாகம தகவலோடு இணைத்து கொடுக்கப்பட்டுள்ள உலக பிரகாரமான சரித்திர கதையை தயவுகூர்ந்து பாருங்கள். இதை நீங்கள் என்னுடைய இணையதளத்தில் ஆங்கில மொழியிலும், தெலுங்கு மொழியிலும் காணலாம். www.kingdomofchrist.info

ஒரு தேசமாக இருந்த இஸ்ரவேல், ஏரோதின் மரணத்திற்கு பிறகு இன்னும் சில பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. *லூக்கா 3:1-2.* தேவனுடைய மக்கள் அவருடைய உடன்படிக்கைகளுக்கு உண்மையாக இருந்திருந்தால், மற்ற தேசத்தவர் வந்து இவர்களுக்கு தொந்தரவு கொடுக்கும்படி அவர் அனுமதித்திருக்க மாட்டார் என்பதையே இஸ்ரவேல் உடனான தேவனுடைய உறவைப் பற்றி விளக்குகின்ற முந்தைய பாடங்கள் நமக்கு காட்டுகின்றன. அதன் காரணமாக, மல்கியா முதல் சுவிசேஷ காலம் வரையிலும் உள்ள நானூற்றுக்கும் கூடுதலான வருஷ காலத்தில் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து எருசலேமுக்கு தேவன் மீட்டுக்கொண்டு வந்திருந்த ஜனங்கள் மீண்டும் ஒருமுறை அவருக்கு எதிராகக் கலகம் செய்தார்கள். மல்கியா தீர்க்கதரிசியும் இயேசுகிறிஸ்துவும் அவர்களுடைய பெலவீனங்களை தெளிவாக விவரித்துக் காண்பித்தார்கள். யூதாவின் மார்க்கத்தலைவர்களின் பாவங்களைப் பற்றி சுருக்கமாக இயேசு தெரிவிப்பதைப் பாருங்கள். *மத்தேயு 23:1-39; லூக்கா 11:37-54.* தேவன் தாம் உடன்படிக்கைகளை செய்துகொண்ட மக்களிடம் பொறுமையாக நடந்துகொண்டார்; அவர்களுக்கு உண்மையாகவும் இருந்தார் என்பதை சுவிசேஷ புத்தகங்களில் பார்க்கின்றோம். இந்த ஜனங்கள் யாக்கோபு மூலமாய் உருவான ஆபிரகாமின் சந்ததியாராய் இருந்தார்கள்.





இயேசுவானவர் எந்த மக்களிடம் சென்று தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்துக்கொண்டிருந்தாரோ, அதே மக்களை பற்றி தான் ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தங்கள் பண்ணியிருந்தார். *லூக்கா 4:43.* ஆறாம் பாடத்தை பாருங்கள். ஆபிரகாமின் சந்ததியாரில் அநேகர் "புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று" சொல்லப்பட்டிருந்தபோதிலும் கூட தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து மேசியா பிரசங்கிப்பதை கேட்கக் கூடிய வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டது. *மத்தேயு 8:10-12.* யூதரிலும், புறஜாதியாரிலும் "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாய்" இருந்தவர்கள் எவர்களோ, அவர்களே தேவ குமாரன் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்ததை கேட்டு, அந்த ஆவிக்குரிய விருந்தில் பங்குபெறும் அனுமதியை பெற்றுக்கொண்டார்கள்.

பிரதான ஆசாரியனுடைய குடும்பத்தார் சார்ந்திருந்த கூட்டத்தினர் மரித்தோரின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லாதவர்களாய் இருந்த போதிலும் கூட, இயேசுவின் காலத்தில் லேவி ஆசாரியத்துவ முறைமை இந்தப் பூமியின் மீது செயல்பட்டுக்கொண்டுதான் இருந்தது. *லூக்கா 20:27.* பிரதான ஆசாரியனாயிருந்த காய்பா என்பவன் தன்னுடைய ஸ்தானத்தையும், ஆலோசனைச் சங்கத்தைச் சேர்ந்த சில குறிப்பிட்ட அங்கத்தினர்களுடைய ஸ்தானத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு, இயேசு சாகவேண்டும் என்று தீர்க்கதரிசனமாக சொன்னான். *யோ. 11:45-53.* உலகெங்கிலுமுள்ள மார்க்கங்களின் தலைவர்களில் அநேகர் தங்கள் வேலைகளை லாபகரமாகவும், சமுதாய அங்கீகாரத்துடனும் செய்ய அறிந்திருக்கிறார்கள். *லூக். 16:14; 20:45-47.* இயேசு கிறிஸ்துவை கொல்லவேண்டும் என்று காய்பாவும், சில தலைவர்களும் முடிவு செய்துவிட்ட பிற்பாடு, அவர்களை சந்திக்கக் கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இஸ்ரவேலருடைய தலைவர்களுக்கிருந்த

ஆவிக்குரிய பெலவீனங்களைக் குறித்து ஒரு மனிதனுடைய திராட்சத்தோட்டத்தையும் தோட்டக்காரர்களையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு உவமையின் மூலமாக விளக்கினார். "வேதபாரகரும் பிரதான ஆசாரியரும்" தங்களைக் குறித்து இந்த உவமையைச் சொன்னாரென்று அறிந்து, இருதயத்திலே குத்தப்பட்டார்கள். பார்க்கவும் *லூக்கா 20:9-19.* பொல்லாத மனிதர்கள் ஆசாரியத்துவத்தை ஆக்கிரமித்துவிட்டார்கள் என்பதை தேவன் அறிந்துகொண்டபோதிலும், அந்த லேவிய ஆசாரியத்துவ முறைமையை அவர் தொடர்ந்து கனப்படுத்தி வந்தார். தேவனுடைய சித்தத்தை தேடும் மனிதர்களுக்கு அவர் உண்மையுள்ளவராகவும், பொறுமை உள்ளவராகவும் அன்புள்ளவராகவும் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

இஸ்ரவேலில் இருந்தவர்களில் பேதுருவையும் அவன் சகோதரன் அந்திரேயாவையும் போல அநேகர் மேசியாவின் வருகையை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். *யோவான் 1:40-42.* அவர் என்ன செய்வார் என்பதை பற்றி முழுமையாக அவர்கள் புரிந்துகொள்ளாத போதிலும், தங்களை சரியாக வழிநடத்துவார் என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இயேசுவின் வழிநடத்துதலே தேவ ஞானமாக இருக்கிறது. அது மனித ஞானத்துக்கு அப்பாற்பட்ட உயரிய சிந்தனையும், திட்டமும், செயல்பாடும் உடையதாக இருக்கிறது. தேவன் தம்முடைய ஞானத்தை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்தபோதிலும், தேர்ந்தெடுக்கும் உரிமையை அவர் மனிதர்களுக்கு தந்திருக்கிறார். யூதர்கள் அடிக்கடி நன்மைக்கு பதிலாக தீமையையே தேர்ந்தெடுத்தார்கள். யூதர்களுடைய நம்பிக்கையை குறித்து யாக்கோபின் கிணற்றண்டை இயேசு சந்தித்த சமாரிய பெண் பேசினாள். "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும் போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்." *யோவான் 4:25.* ஆசாரியத்துவம் நேர்மையற்ற நிலைமையில் இருந்த





போதிலும், யூதர்கள் தேவாலயத்துக்குச் சென்று வழிபடுவதை நிறுத்தவில்லை. சகரியா ஒரு ஆசாரியனாக இருந்தான். *லூக்கா 1:5.* இந்தப் பூமியில் இயேசு வாழ ஆரம்பித்து எட்டாம் நாள் ஆன போது யோசேப்பும், மரியாளும் அவருக்கு விருத்தசேதனம் பண்ணினார்கள். *லூக்கா 2:21.* "பஸ்கா பண்டிகையில்" எருசலேமுக்குப் போவது அவர்களுக்கு வழக்கமாக இருந்தது. இயேசு பன்னிரண்டு வயதாயிருந்த போது, அவரையும் தங்களோடுகூட அழைத்துப்போனார்கள். *லூக்கா 2:41,42.* லேவி ஆசாரியத்துவ முறைமைக்கு இயேசு உரிய மதிப்பு அளித்து வந்தார். *லூக்கா 5:12-14.* யூதர்கள் மத்தியில் இருந்த ஞானிகளால் உருவாக்கப்பட்டிருந்த சட்டங்களை அவர் மதிக்கவில்லை. *மத். 15:1-9.* தேவனுடைய ராஜ்யம் மற்றும் தமது பிதாவுக்காக இயேசு கட்டும் சபை ஆகியவற்றிற்கும் "யூத கிறிஸ்தவத்துக்கும்" (Judeo - Christianity) எந்த சம்பந்தமும் இல்லை. இயேசுவோடு தொடர்ந்து எதிர்த்து நின்ற பரிசேயர்களாலும், ஞானிகளாலும் ஆதரிக்கப்பட்ட மார்க்கத்துக்கும், மக்களுக்காக தேவன் மோசே மூலமாக கொடுத்த நியாயப் பிரமாணத்துக்கும், லேவிய ஆசாரியத்துவ முறைமைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

இன்றைக்கு உள்ள கிறிஸ்தவர்களுக்கு இதில் ஒரு பாடம் இருக்கின்றது. மீதியாயிருந்த இஸ்ரவேல் ஜனங்களையும், லேவிய ஆசாரியத்துவ முறைமையையும் தேவன் நிலைநிறுத்தினார். மேசியாவின் வருகைக்கு குறித்த காலம் வரும் வரையிலும் தேவனுக்கும் அவருடைய "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளுக்கும்" இடையே உறவை நிலைநிறுத்தும் பணியை இவைகள் செய்தன. இன்றைக்கு மார்க்க விஷயங்களில் ஈடுபாடுள்ள அநேகர் "சீலையையும் கழுவும் பாத்திரத்தையும்" தெரிந்துகொள்ளக் கூடிய மனநிலையாகிய தலைமைப் பண்புக்கு ஏற்ற மனநிலையை புறக்கணித்து விட்ட போதிலும், தேவன் மனம் மாறவில்லை.

"சீலையையும் கழுவும் பாத்திரத்தையும்" தெரிந்துகொள்ளும் தாழ்மையான குணம் ஒன்றை மாத்திரமே தலைமைப் பண்பாக இயேசு அங்கீகரிக்கின்றார். *மத்தேயு 20:20-28.* அவர் தேவனுடைய ராஜாவாகவும், ஆசாரியராகவும் கிறிஸ்தவர்களுக்கு ஊழியஞ்செய்கிறார். *லூக்கா 22:24-30; யோவான் 13:12-17; எபிரெயர் 1:8;4:14-16.* "உற்சாகமாக ஊழியம் செய்யும் அதே நேரத்தில் வழிநடத்துவது" என்பதே இதன் கருத்தாக இருக்கின்றது. அநேக மார்க்க குழுக்களில் உள்ள மனிதர்கள் "முதன்மையான இருக்கையை" விரும்புகின்ற மனநிலையில் தான் இருக்கிறார்கள். தேவன் இந்த மனநிலையை ஒருபோதும் அனுமதித்ததில்லை. அந்தக் குழுக்களில் தலைமை பொறுப்புடன் சபையை கண்காணிப்பவர்கள் எவர்களோ, அவர்கள் தங்களை சபையில் உள்ள மற்றவர்களைப் போல சாதாரணமாக காண்பித்துக்கொள்வதில்லை. அப்படி தங்களை சாதாரணமாக காண்பித்துக்கொள்பவர்கள் இருக்கக்கூடிய ஒரு சபையைக் கூட அந்தக் குழுக்களில் நாம் பார்க்க முடியாது. *அப்போஸ்தலர் 14:23.* "வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப்போலவும்" இருந்திருக்க வேண்டிய ஆபிரகாமின் சந்ததி "இரட்சிக்கப்பட்ட" மீதியான ஜனமாகக் குறைந்து போனதற்கு இது தான் காரணம். *ஆதியாகமம் 22:17.*

"விலையுயர்ந்த முத்தை" தேடுகின்ற கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையுள்ளவர்களாக இருந்து, தங்கள் பிரயோஜனத்திற்கென்று வேதத்தை வாசித்து அதைக் கற்றுக்கொள்கிறார்கள். தங்களுடைய பிரயோஜனத்திற்கென்று வேதத்தை வாசித்து அதைக் கற்றுக் கொள்ளாதவர்கள், இன்னொரு மனிதனால் உருவாக்கப்பட்ட "வாழ்க்கைப் பெட்டிக்குள்" அடைபட்ட நிலைமையிலேயே இருப்பார்கள். ஒரு முறை இந்த மார்க்க உலகத்தை நாம் பார்த்தாலே, மற்றவர்களை சார்ந்துகொள்வது முட்டாள்தனமானது என்ற விழிப்புணர்வு நமக்கு ஏற்பட்டு நமக்கென்று





வேதத்தை கற்றுக்கொள்ள ஆரம்பித்துவிடுவோம். தேவனுடைய ராஜ்யத்தையும், மறுமையின் வாழ்க்கையையும் சுதந்தரித்துக் கொள்வதற்கு, ராஜ்யம் நமக்குள்ளும், நாம் ராஜ்யத்துக்குள்ளும் இருக்க வேண்டியது அவசியமானது. *மத்தேயு 19:29; 25:34; லூக்கா 17:20,21; கொலோசெயர் 1:12,13.* நமது தற்பொழுதைய இரட்சிப்புக்கும், அந்த இரட்சிப்பு நித்தியத்துக்கும் தொடர்வதற்கும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி புரிந்துகொள்ள வேண்டியிருக்கின்றது.

"அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர் தானோ என்று கேட்டான்." *லூக்கா 13:23,24.* இயேசு தமது வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருந்தவர் களை இவ்விதமாக உற்சாகப்படுத்தினார்: "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்." தேவனுடைய ராஜ்யத்துக்குள்ளான ஜீவனில் பிரவேசிப்பதை பற்றிய அவரது அறிவிப்பை தொடர்ந்து அவர் பண்ணின பிரசங்கத்திற்கு, தேவனை அறிந்து கொள்வதையும் அவரால் அறியப்படுவதையும் குறித்த சத்தியமே மையப்பொருளாக அமைந்துள்ளது. கிறிஸ்துவின் சுவிசேஷமானது கிறிஸ்தவர்களின் பிதாவாக செயல்படுகின்ற சர்வவல்லமையுள்ள தேவனைப்பற்றியதாக இருக்கின்றது. இயேசு தமது பிதாவுக்காக கட்டுகின்ற சபையானது பிதாவின் குடும்பமாய் இருக்கின்றது. *மத்தேயு 7:21-23; 12:48-50; எபி. 2:10-16.* பிள்ளைகள் தங்கள் பெற்றோரை அறிந்திருக்கிறார்கள். பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை அறிந்திருக்கிறார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கையை குறித்து விசாரித்த மனிதனுக்கு இப்படித்தான் இயேசு பதிலளித்தார். நாம் நமது கவனத்தை தேவனிடமிருந்து மனிதர்களுக்காக இயேசு கொண்டு வந்த சத்தியத்தின் மீது செலுத்தவேண்டும். ராஜ்யத்துக்கு உட்பட்டு "தேவனுடைய குமாரனாக" வாழும் வாழ்க்கை, மார்க்கத்தைப் பற்றியும்,

இரட்சிப்பைப் பற்றியும் "மனிதனுடைய ஞானம்" தெரிவிக்கின்ற கருத்துக்களிலிருந்து வித்தியாசப்பட்டிருக்கின்றது. இயேசுவானவர், தமது பிரசங்கத்தில் கிருபையை பற்றி குறிப்பிடவில்லை என்பதை தயவு கூர்ந்து கவனியுங்கள். *லூக்கா 13:24-30.* கிருபை இப்பொழுது நமக்கு தந்தருளப்பட்டிருக்கின்றது. நியாயத்தீர்ப்பு நாளென்பது, தேவன் தமது ஆவிக்குரிய ராஜ்யத்தில் தமது பிள்ளைகளை ஒன்றுச் சேர்க்கும் நாளாக இருக்கப்போகின்றது. பார்க்கவும் *மத்தேயு 11:25-27; லூக்கா 8:19-21.* இயேசு திரும்ப வருகின்ற போது மாம்சத்துக்குரிய காரியங்களுக்கும், காலத்துக்கும் தேவன் முடிவு ஏற்படுத்துவார். *லூக்கா 20:34-36.*

இந்த உலகத்தின் ஒரு பகுதியில் ஒரு காலத்தில் யோவான் ஸ்நானனையும் இயேசு கிறிஸ்துவையும் அற்புதமாக தேவன் கொண்டு வந்தார்; சரித்திரத்தில் அவர் மேற்கொண்ட இந்த பிரதான நடவடிக்கையைப் பற்றி மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோர் தங்கள் புத்தகங்களில் முதல் நான்கு அதிகாரங்களில் எழுதி வைத்துள்ளனர். இவர்கள் இருவரும் தங்கள் சுவிசேஷ புத்தகங்களில் அவர்களுடைய பிறப்புகளைப் பற்றிய செய்தியோடு ஆரம்பித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இயேசு பண்ணின பிரசங்கத்தின் ஆரம்பப் பகுதிக்கு நம்மைக் கொண்டு செல்கின்றனர். *மத்தேயு 4:17; லூக்கா 4:43.* யூதர்கள் மற்றும் விமர்சகர்கள் தெரிந்துகொள்ளும்படியாக இந்த நான்கு அதிகாரங்களிலும் அநேக தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றங்களை பற்றி எழுதியிருக்கிறார்கள். சரித்திரத்தின் வழியாகவும், சந்ததிகளின் வழியாகவும் பழைய ஏற்பாட்டோடு தொடர்புபடுத்தி எழுதியிருக்கின்றார்கள். இந்த சரித்திர விவரம் இப்புத்தகத்திலுள்ள ஐந்தாம் பாடத்திலிருந்து பத்தாம் பாடம் வரையிலும் இருக்கின்ற பாடங்களோடு தொடர்புள்ளதாக இருக்கின்றது. இந்த விவரங்களையெல்லாம் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றத்தோடு தொடர்புபடுத்துவதற்கு போதுமான இடம் இந்தப்





பாடத்தில் நமக்கில்லை. தயவுகூர்ந்து "தேவனுடைய ராஜ்யம்" என்ற எனது புத்தகத்தின் நான்காம் பாகத்தைப் பாருங்கள்.

மத்தேயுவும், லூக்காவும் சாத்தானை நமக்கு எதிராக செயல்படுகிறவர்களின் தலைவனாக அறிமுகப்படுத்துகிறார்கள். இயேசு இந்தப் பூமியின் மீது ஊழியம் செய்த காலத்தில் அவருடைய ஊழியத்தில் முக்கியப் பங்காற்றிய பரிசுத்த ஆவியானவரையும், இவர்கள் அறிமுகப்படுத்துகிறார்கள். *மத்தேயு 3:11,16; 4:1; லூக்கா 3:22;4:1; யோவான் 3:34.* பரிசுத்த ஆவியானவர் மனுஷகுமாரனாகிய இயேசுவுடன் இணைந்து செயல்படத் தொடங்கின பிற்பாடு, இயேசு அடிக்கடி இயற்கையின் நியதிகளை மாற்றினார். இதையே அற்புதம் என்கிறோம். *மத்தேயு 8:23-27; லூக்கா 7:14.* இயேசு கிறிஸ்து ராஜாவாகவும், ஆசாரியராகவும் பரலோகத்திற்கு திரும்பி சென்றுவிட்ட பிறகு, தேவனுடைய குமாரர்கள் மற்றும் குமாரத்திகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் முக்கியப்பங்காற்றும் தலைமைப் பொறுப்பினை பரிசுத்த ஆவியானவர் பெற்றுக்கொண்டார். *2 கொரிந்தியர் 6:18; ரோமர் 8:5-27; 2 தெசலோனிக்கேயர் 2:13-15.* இயேசு கிறிஸ்து சிலுவையில் மகிமையடைந்து, அவருடைய உயிர்த்தெழுதலை தேவன் முழுமைப்படுத்தும் வரையிலும் பரிசுத்த ஆவியானவர் தமது சுத்திகரிக்கும் பணியினை தொடங்கவில்லை. *யோவான் 7:37-39.* நசரேயனாகிய இயேசு யோவான்ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெற்ற சரித்திர நிகழ்விலிருந்து மாற்கு தனது சுவிசேஷ புத்தகத்தை ஆரம்பிக்கிறான். "அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, வானம் திறக்கப்பட்டதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார். அன்றியும், நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று." *மாற்கு 1:10-11.* இந்த வாக்கியத்தைத் தான் ஒவ்வொரு கிறிஸ்தவனும் நியாயத்தீர்ப்பு நாளில் தேவனிடமிருந்து கேட்பதற்கு கவனமாய் இருப்பான். ஏறக்குறைய மாற்கு

புத்தகத்தில் காணப்படும் எல்லாத் தகவலுமே மத்தேயு மற்றும் லூக்கா புத்தகத்தில் காணப்படுகிறது.

வேதத்தை கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவ மாணவர்கள் வரிசை முறையில் அமைந்துள்ள வேதாகம தலைப்புகளைப் பற்றி கற்றுக்கொள்வதற்கு தங்களை ஒப்புக்கொடுத்து, அவைகளை நம்பி, அவைகள் மீது விசுவாசம் வைக்கவேண்டியது அவசியம். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமின் சந்ததியைப் பற்றி தேவன் தெரியப்படுத்தும் விவரத்தை போதுமான அளவுக்கு கற்றுக்கொள்ளாமல், சுவிசேஷ புத்தகங்களை நம்மால் அறிவுப்பூர்வமாக வாசிக்க முடியாது. முந்தைய பாடங்களில் தேவன் தெரிவித்த விவரத்துக்கும், ஒத்த அமைப்புடைய சுவிசேஷ புத்தகங்களுக்கும் இடையில் உள்ள சரித்திர தொடர்புகளை இப்பாடத்தில் மேலே குறிக்கப்பட்ட பகுதியில் காணலாம். மீதமுள்ள பகுதியை தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இயேசு கிறிஸ்து பிரசங்கிப்பதை கேட்பதற்கும், புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்தப்போகின்றோம்.

ராஜ்யத்தைப் பற்றிய அடிப்படை உண்மைகள் கண்களுக்கு தெரிவதில்லை. ஆனாலும் அவைகள் உண்மையாகவே இருக்கின்றன; இவைகளை ஆபிரகாமின் சந்ததியார் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பி, அவர்களை தம்மண்டை இழுத்துக்கொள்ளும்படி தீட்டிய திட்டங்களை முதலாவது நாம் கவனிப்போம். இயற்கை நியதியை மாற்றும் வல்லமை இயேசுவுக்கு இருந்தபோதிலும் மனிதர்களின் ஜீவப்பிரமாணங்களில் அவர் எந்த மாற்றமும் செய்யவில்லை. தேவன் மனித குலத்தை எவ்விதமாக உருவாக்கியிருக்கிறாரோ, அந்த விதத்திற்குத் தகுந்தபடியாகவே நடத்துகிறார். ஆகையினால், மனிதருடைய இயல்புக்கு பொருந்தக் கூடிய திட்டங்களையே இயேசு தீட்டினார். இவைகளைப் பற்றிய விவரத்தை நடைமுறைக்கு ஏற்ற வகையில் மனிதர்கள் வாசித்து புரிந்து





கொள்ள முடியும். ஆவிக்குரிய மனப்பக்குவமுள்ள ஒரு கிறிஸ்தவனிடம் இருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியவைகள் எல்லாவற்றையும் எந்த தடையுமின்றி நம்மால் தெரிந்துகொள்ள முடியும். “சாதாரண மனிதர்களுக்கு” ஆவிக்குரிய அம்சங்கள் மறைவாய் இருக்கும். பார்க்கவும் *மத்தேயு 13:11-17; 1 கொரிந்தியர் 3:1-3.* தேவனுடைய வார்த்தையிலிருந்து தகவல் அறிந்துகொள்பவனே ஆவிக்குரிய மனப்பக்குவமுள்ள கிறிஸ்தவனாய் இருக்கிறான். தேவனுடைய வார்த்தை எந்தப் பின்னணியில் எழுதப்பட்டிருக்கிறதோ, அதன்படியே நாம் புரிந்துகொள்ள முயற்சிக்கிறோம். அதன்பின்னர் நாம் புரிந்துகொண்டதை நம்பும்படி முடிவு செய்யவேண்டும். நம்பிக்கை வைக்கும்படி தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டவர்கள், தங்கள் சிந்தனையை உலகத்திற்குரிய காரியங்களிலிருந்து விடுவித்து, பரலோகத்திற்குரிய காரியங்களில் அதை நிலைக்கச் செய்கிறார்கள். உண்மை என்றும், இன்றைக்கும் என்றென்றைக்கும் நமது வாழ்வுக்கு தேவையான பதிலை தரக்கூடியது என்றும், நாம் நம்புகின்ற காரியத்தின் மீது விசுவாசம் வைப்பதற்கு தீர்மானிப்பதன் மூலமாக ஆவிக்குரிய ராஜ்யத்தில் நமது சிந்தனையை நிலைக்கச்செய்ய முடியும்.

இந்தப் பூமியில் தமது வேலையை செய்து முடிப்பதற்காக இயேசு தீட்டிய திட்டங்கள் சிலவற்றை பின்வருமாறு காணலாம்.

1. அவர் வெளியே “சுற்றித் திரிந்து” 12 மனிதர்களால் ஆன குழுவை தெரிந்தெடுத்தார். அவர் இஸ்ரவேலர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்துக்கொண்டிருந்த அதே வேளையில், அந்த ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிப்பதற்கு அப்போஸ்தலர்களுக்கு கற்றுக்கொடுக்கவும் செய்தார். அதை “நகரும் அப்போஸ்தலர் பள்ளிக்கூடம்” என்று நாம் அழைக்கலாம்; ஆயினும், அதை அடையாளப்படுத்தும் பெயர் பலகை தொங்க விடுவதற்கு கட்டிடம் எதுவும் அங்கு இருக்கவில்லை.

*லூக்கா 9:57-60.* அவரே அதற்குத் தலைவராக இருந்தார், அதுமட்டுமல்ல, "சீலையையும், கழுவும் பாத்திரத்தையும்" எடுத்துக் கொண்டு அந்தக் குழுவுக்கு சேவை செய்யுமளவிற்கு தெய்வீக தலைமைப் பண்பினை உடையவராகவும் அவர் இருந்தார். *லூக்கா 6:12-16.* இன்றைய உலகில் சுவிசேஷ ஊழியம் செய்வதற்கு இது ஒரு அற்புதமான திட்டமாக இருக்கின்றது. ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கக் கூடிய ஒரு ஆவிக்குரிய தலைவரும், மனமாற்றம் அடைந்த 12 பேருமே இத்திட்டத்திற்குத் தேவையாய் இருந்தார்கள்.

2. இயேசுவின் ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவரும் அவருடன் சேர்ந்து கொண்ட பிற்பாடு, இயற்கையின் நியதியை மாற்றும் வல்லமையை அவர் பயன்படுத்தினார்:

அ இயேசு தொட்டதினால் குஷ்டரோகி ஒருவன் சொஸ்தமானான். லேவி ஆசாரியத்துவ சட்டதிட்டங்களை மதிக்கிறவராக அவர் இருந்ததினால், குஷ்டரோகியாயிருந்து சொஸ்தமான அந்த மனிதன் தன்னை "ஆசாரியனுக்கு" காண்பிக்கும்படி அவனிடம் சொல்லியனுப்பினார். *மத்தேயு 8:3,4.*

ஆ புறஜாதியானாய் இருந்த ஒரு நூற்றுக்கு அதிபதி, ஆண்டவரே! என்று இயேசுவை அழைத்து உதவி கேட்டான், "என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான்" என்று சொன்னான். அந்த வேலைக்காரனுடைய அருகில் செல்லாமலேயே அவர் அவனை குணமாக்கினார். அந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைக் கண்டு அவருக்கு ஆச்சரியம் உண்டானது. *மத்தேயு 8:5-10.*





இ பேதுருவின் மாமியையும் ஜுரத்திலிருந்து அவர் குணப்படுத்தினார். "அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்." *மத்தேயு 8:15.*

ஈ பயிற்சி பெற்று வந்த தமது அப்போஸ்தலர்கள் பயந்திருந்த வேளையில், அவர்களை காப்பாற்றும்படிக்கு காற்றையும், கடலையும் அவர் அதட்டினார். "அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள்" என்று கேட்டார். *மத்தேயு 8:23-27.*

உ கடைசியாக, இறந்துபோன ஒரு சிறுபெண்ணை மீண்டும் உயிருடன் எழுப்பினார். **"இந்தச் சங்கதி அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று."** பார்க்கவும் *மத்தேயு 9:18-26.*

இந்த விவரங்களையெல்லாம் தன்னுடைய சுவிசேஷ புத்தகத்தில் மத்தேயு எழுதி வைத்திருப்பதைப் பற்றி பல முடிவுகளுக்கு நாம் வரலாம். [1] தேவன் தம்மிடம் கொடுத்து அனுப்பிய செய்தியை ஒரு ஜனக்கூட்டத்துக்கு தெரியப்படுத்துவதற்கு அவர்களை தம்மண்டை வரவழைப்பது இயேசுவின் நோக்கமாயிருந்தது. [2] கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கைக்கும், அவர்கள் சந்திக்க இருக்கும் நியாயத்தீர்ப்புக்கும் "தேவனைத் தெரிந்துகொள்வது" முக்கியமானதாக இருந்ததினால், இவ்விதமாக, தேவனையும், தம்மையும் பற்றி இயேசு வெளிப்படுத்தினார். *யோவான் 14:11; 17:3; 1 கொரி. 1:21.* [3] இயேசு மனதுருக்கம் உள்ளவராய் இருந்ததினால் காயப்பட்டிருந்த மக்களுக்கு உதவும்படி விரும்பினார். எந்த விதத்தில் இருந்தாலும் இவைகள் உண்மையான விவரங்களாய் இருக்கின்றன. தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தில், சரியாக இந்த இடத்தில் இந்த விவரத்தை வைக்கவேண்டுமென்று இதை எழுதியவரை பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தியது ஏன்? இந்தக் கேள்வி வேதத்தை கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு எழும்பலாம். வாசிக்கத் தெரிந்த எல்லா கிறிஸ்தவர்களும் இந்த விவரங்களை வாசிக்க முடியும். வாசித்ததை கேட்டு சிந்திப்பதன் மூலம்

இந்தச் சிறிய விவரத்தில் இயேசுவைக் கொண்டு தேவன் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் யூகிக்க முடியும். ஒரு விவரத்தைக் கேட்டு அதைக் குறித்து சிந்தித்து நாம் ஒரு முடிவுக்கு வருகிறோம்; நம் மனங்களில் கற்றுக்கொள்ளும் செயல் முறையை இப்படித்தான் தேவன் வடிவமைத்திருக்கிறார். அதே சமயத்தில், மனித குலத்துக்கு கற்பனை செய்யக்கூடிய சக்தியையும் தேவன் கொடுத்திருக்கிறார். இதே இயேசு நமது ராஜாவாக தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்பதை நம்மால் கற்பனை செய்ய முடிகின்றதா? அவர் இன்றைக்கும் இதே இயேசுவாகத் தான் இருக்கின்றாரா? நாம் துன்பப்படுகின்ற போது அன்று போல இன்றும் அவர் மனதுருகுகிறாரா? அவருடைய பரிசுத்த இரத்தம் நமது பாவத்துக்கான பலியாக இருக்கின்றது. ஒவ்வொரு இரவும் பகலும் தனிப்பட்ட முறையில் அவர் நமக்காக பரிந்து பேசுகிறவராக இருக்கின்றார். தேவனுடைய வார்த்தைகளிலிருந்து எதை நாம் புரிந்துகொள்கிறோமோ அதைப் பற்றி நாம் கற்பனை செய்து பார்த்து, அதன் மீது விசுவாசம் வைக்காவிட்டால், அந்த விசுவாசத்தை நாம் சந்தோஷமாக அனுபவிக்க முடியாது.

மத்தேயு தனது சுவிசேஷ புத்தகத்தின் இதே பகுதியில் இன்னும் இரண்டு விவரிப்புகளை பதிவு செய்து இருக்கிறான். அவைகள் மற்றத் தலைப்புகளை நம் சிந்தனைக்குக் கொண்டு வருகின்றன.

1. இயேசு ''தேவனுடைய குமாரன்'' என்பதை பிசாசுகள் அடையாளம் கண்டுகொண்டன. பிசாசுகள் அவரோடு உரையாடி, தங்கள் விருப்பத்தை பணிவுடன் தெரிவித்தபோது அவைகளின் விருப்பத்துக்கும் அவர் ஒத்துப் போனார். *மத்தேயு 8:28-34.* நசரேயனாகிய இயேசு தான் தேவனுடைய குமாரன் என்பதை பிசாசுகள் மிகச் சரியாக அடையாளம் கண்டு கொண்டதை அவ்வளவு எளிதாக நம்மால் நம்ப முடியவில்லை. அப்படியிருக்கையில், அவருடைய சொந்த





ஊரை சேர்ந்த ஜனங்கள், ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களில் சொல்லப்பட்ட மேசியா தாம் தான் என்று அவர் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டதால் அவர் மீது கோபமூண்டு, எழுந்திருந்து, அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு முயற்சி பண்ணினார்கள். *லூக்கா 4:14-30.* இரண்டு முடிவுகளுக்கு நாம் வரமுடியும்: [1] சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருக்கிற ஆவி உலகம் ஒன்றிருக்கிறது, அதில் சாத்தானும், பிசாசுகளும் தீய ஜனங்களின் மீது தங்கள் வல்லமையை செயல்படுத்தும்படி தேவன் அவைகளுக்கு அனுமதி கொடுக்கிறார். கிறிஸ்தவர்களுக்கு எதிராக சாத்தான் தீட்டிய திட்டங்களுக்கு பயன்படும்படியான வல்லமையான ஆயுதங்களை இந்த தீய ஜனங்கள் உருவாக்கிக் கொடுக்கிறார்கள். *எபேசியர் 6:10-18.* [2] உலகத்திலுள்ள எல்லா வல்லமைகள் மீதும், சாத்தான் மீதும், பிசாசுகள் மீதும் கூட இயேசுவுக்கு வல்லமை கொடுத்து இருப்பதால் பிதாவாகிய தேவனை கிறிஸ்தவர்கள் போற்றுகிறார்கள். *எபேசியர் 1:20-23;3:10.*

2. “திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது” என்று திமிர்வாதக்காரனிடம் இயேசு சொன்ன சம்பவத்தை நாம் சற்று கவனிப்போம். இயேசு அங்கிருந்த வேதபாரகரின் நினைவுகளை அறிந்து, அவர்களிடம் “நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே

பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி திமிர்வாதக்காரனை நோக்கி : நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்.'' *மத்தேயு 9:2-6.* தாங்கள் சொன்னதே சரி என்று சாதிக்கும் சாத்தானுடைய கூட்டம் ஒன்று இருந்ததை இந்தச் சம்பவம் அறிமுகப்படுத்துகிறது. அவர்கள் யாரெனில் "நியாய சாஸ்திரிகளும்" பரிசேயரும் தான். அவர்கள் மிகுந்த பக்தியுள்ளவர்களாகவும், அதிகமான சுயநீதி உள்ளவர்களாக வும், அற்பத்தனமானவர்களாகவும், கொலைகாரர்களாக வும் இருந்ததாக இயேசு விவரிக்கிறார். *லூக்கா 11:47-51.* சவுலாயிருந்து அப்போஸ்தலனாகிய பவுலாய் மாறினவன், ஒரு காலத்தில் இந்தக் கூட்டத்தில் ஒரு தலைவனாய் இருந்தவன் தான். *அப்போஸ்தலர் 7:57,58.* அவர்கள் வெளிப்படையாக இயேசுவின் போதனைகளையும், அவர் செய்த அற்புதங்களையும் தாக்கி அவப்பெயர் உண்டாக்க நினைத்த போதிலும், பல சமயங்களில் அவருடைய போதனை முறைகளுக்கு அவர்கள் கைகொடுக்கிறவர் களாகவே இருந்தார்கள். பிரத்தியேகமாக, அவர்கள் கெட்டவர்களாக நடந்துகொண்ட சமயங்களில் இயேசு தமது உவமைகளில் சொன்ன கதைகள் மூலமாக, அவர்கள் கெட்டவர்கள் என்று அடையாளப்படுத்திக் காண்பித்தார். பார்க்கவும் *மத். 21:45; லூக்கா 11:14-20.* எப்படியிருப்பினும் பாவ மன்னிப்பைப் பற்றிய விஷயமும், அறிமுகப்படுத்தப் படுகிறது என்பது முக்கியமானது.





இயேசுவானவர் பாவங்களுக்காக சிலுவையில் மரணமடை வதற்கு முன்பாகவே பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் பெற்றிருந்தார். பார்க்கவும் *மாற்கு 8:31;16:15,16.* ஆதாமும் ஏவாளும் தேவனுடைய முதல் உடன்படிக்கையை மீறின காலந்தொடங்கி, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் ஆகிய புதிய உடன்படிக்கையை அவர் ஏற்படுத்துகின்ற வரையிலும் வாழ்ந்து வந்த மக்களுடைய பாவங்களையெல்லாம் தேவன் மன்னித்து வந்தார் என்பதை புரிந்துகொள்கிறோம். மனந்திரும்பி, யோவான்ஸ்நானன் கொடுத்த ஞானஸ்நானத்தை பெற்றவர்களும் இவர்களில் அடங்குவார்கள். இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுடைய பாவங்களுக்காக மட்டுமல்ல மற்ற எல்லாருடைய பாவங்களுக்காகவும் மரித்திருக்கிறார். *ரோமர் 3:21-26; எபிரெயர் 9:15; 11:39,40.*

இப்பாடத்தில் நாம் மேற்கண்ட பகுதியானது மனித குலத்தின் சரித்திரத்தில் இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. இது வேதாகம சரித்திரம் மட்டுமல்ல, காலத்தோடு நேர்த்தியாகப் பொருந்தக்கூடிய உலக சரித்திரமாகவும் இது இருக்கின்றது. தேவ மக்களுடைய வரலாற்றின் தொடர்ச்சியாக அமைந்துள்ள இது லேவிய ஆசாரியத்துவ காலத்தைச் சேர்ந்தது. "இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல" என்று அப்போஸ்தலனாகிய பவுல் அகிரிப்பா ராஜாவுக்கு சொன்னது போல் இது அமைந்துள்ளது. *அப்போஸ்தலர் 26:26.* ஆபிரகாமின் சந்ததியாருக்கு தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி வெற்றிகரமாக பிரசங்கிக்கும்படியாக இயேசு எப்படி ஆயத்தம் பண்ணினார் என்பதை பார்த்திருக்கிறோம். **இயற்கை நியதியை பற்றி மக்கள் என்ன புரிந்துகொண்டார்களோ, அதை வைத்தே தேவனுடைய ராஜ்யத்துக்கு உகந்த ஆவிக்குரிய வாழ்க்கையை** இயேசு அறிமுகப்படுத்துவதை இப்பாடத்தின் மீதமுள்ள பகுதியில் பார்க்கலாம். இயேசு கிறிஸ்து

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து தெளிவாக பிரசங்கித்தார்; தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கும்படி தமது அப்போஸ்தலர்களுக்கும் போதித்தார். இருந்தாலும் கூட, தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி நடைமுறைக்கேற்ற போதனைகளை இன்று கேட்க முடிவதில்லை. ராஜ்யத்தை பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிற விதத்தில் ஒருவேளை பிரச்சனை இருக்கலாம்.

கிறிஸ்தவர்கள் தங்கள் கண்களால் பார்க்க முடியாத காரியங் களை, தேவனுடைய வார்த்தையை வாசித்துக் கற்றுக்கொள்கிறார்கள். மாம்சத்துக்குரிய காரியங்களை விட மேலானவைகளாக ஆவிக்குரிய காரியங்கள் இருக்கின்றன. தேவன் படைத்திருக்கின்ற நமது கண்கள் இவ்வுலகத்தில் இருப்பவைகளை பார்க்கும் சக்தியோடு படைக்கப் பட்டுள்ளன. ஒளியானது ஒரு பொருளின் மீது படுகின்ற பொழுது அந்த பொருளுக்கு தகுந்தபடி ஒளி அலைகள் மாறுபாடு அடைகின்றன. இந்த ஒளி அலைகள் நமது கண்களை அடைந்த பிறகு அங்கிருந்து மூளைக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றன. ஒன்றை பார்ப்பது இதுதான் முதல் தடவை என்றால் “இது என்ன?” என்று கேட்கிறோம். அதைக் குறித்து அறிந்த ஒருவர் “இது ஒரு ஆப்பிள் மரம்” என்று சொல்லுகிறார். நமது காதுகளில் கேட்கும் வார்த்தைகளை பதிவு செய்து கொள்ளும் சக்தி நமக்கு இருக்கின்றது. அந்த வார்த்தைகள் அவைகளுக்குரிய வடிவத்தோடு நமது மூளைகளில் இடம்பெற்றுள்ள நினைவகங்களில் போய்ச் சேருகின்றன. இந்த இயற்கையின் நியதியின்படி தான் உலகப் பிரகாரமான விஷயங்களை நாம் கற்றுக்கொள்கிறோம். இவ்விதமாக கற்றுக்கொள்ளும்படிதான் தேவன் நம்மை படைத்தார்.

கொடுக்கப்பட்ட காட்சியில் ஆப்பிள் மரத்தோடு கூட இன்னும் சில விஷயங்களையும் நாம் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் அவைகள்





ஒவ்வொன்றையும் தனித்தனியாக நாம் குறிப்பிட வேண்டும். ஒரு ஆப்பிள் பழத் தோட்டம் உருவாவதற்கு அவசியமான ஆப்பிள் மரத்தையும், நிலத்யையும் சூரியனையும் தண்ணீரையும் நாம் தெரிந்துகொள்ள முடியும். நாம் இவைகளை தெரிந்துகொள்வதினால், ஒரு ஆப்பிள் மரம் என்று ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி அந்தக் காட்சியோடு இணைத்து வைத்திருப்பதைப் போல நம் மனதில் தோன்றுகிறது. அப்படிப் போலவே ஒரு நிலத்தை பார்க்கும் பொழுதும் மற்றவற்றை பார்க்கும் பொழுதும் அவைகளைக் குறித்த வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. இந்த தகவலைக் கொண்டு சந்தையில் நாம் வாங்கும் ஆப்பிள் பழங்கள் உற்பத்தி செய்யப்படும் செயல்பாடுகளை நாம் புரிந்துகொள்ள ஆரம்பிக்கலாம். ஒரு காட்சியில் தெரிகின்ற பல விஷயங்களில் ஒன்றை மட்டும் தெரிந்து வைத்துக் கொண்டு, அந்தக் காட்சி முழுவதையும் பற்றி நம்மால் கற்றுக்கொள்ள முடியாது. எல்லா விஷயங்களையும் நாம் தனித்தனியாக தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அந்தக் காட்சியைப் பற்றி நாம் முழுமையாகப் புரிந்துகொள்ளமுடியும்.

இயற்கையின் நியதியின் செயல்பாட்டை பற்றி பகுத்தறிந்து கற்றுக்கொள்வதற்கு இந்த அடிப்படை சிந்தனை பயன்படுகின்ற போதிலும், அநேக கிறிஸ்தவர்களுடைய தனிப்பட்ட வேத ஆராய்ச்சியிலும், சபையின் வேத பாட வகுப்புகளிலும், கற்றுக்கொள்வதற்கு அவசியமான இந்த அடிப்படை நியதி முற்றிலும் காணப்படுவதேயில்லை. வேதத்திலுள்ள ஒரு காட்சியை பற்றி கற்றுக்கொள்வதற்கு முதல் விதிமுறை என்னவென்றால், அந்தக் கதை அல்லது நிருபம் அல்லது சங்கீதத்திலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட விஷயத்தையும் புரிந்துகொள்வதுதான். இது நம்முடைய சிந்தனைக்கு ஒரு காரியத்தைக் கொண்டு வருகின்றது. நமது “அறிவு என்ற பக்கம்” வெறுமையாக இருந்தால், நாம் சிந்தித்து கற்றுக்கொள்வதற்கு அங்கு எதுவுமே இல்லை என்று அர்த்தம். ஒரே விஷயத்தைப் பற்றி மட்டுமே

நமக்கு அறிவு இருந்தால், அது மற்ற விஷயங்களோடு எப்படி சம்பந்தப்பட்டுள்ளது என்று நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. பல சந்தர்ப்பங்களில் நாம் வாசிக்கின்ற பகுதியின் எழுத்தாளன் எந்த விஷயத்தை மனதில் கொண்டு அதை எழுதினானோ, அதைத் தெரிந்து கொண்டால் தான் அந்தப் பகுதியை நாம் புரிந்துகொள்ள முடியும். இயேசுவின் சில போதனைகள் தனித்திருக்கின்றன. ஒவ்வொரு விஷயத்தை பற்றிய அறிவை நாம் சேகரித்த பின்பு, அந்த ஒவ்வொரு விஷயமும் எப்படி ஒன்றோடொன்று இணைந்து ஒரு செய்தியை தெரிவிக்கின்றன என்பதைக் குறித்து சிந்திக்காமல் விட்டுவிட்டால், நம்மால் கற்றுக்கொள்ளவே முடியாது. அறிவைப் பெற்றுக்கொள்வது வேறு, கற்றுக்கொள்வது வேறு; இரண்டும் ஒன்றல்ல. கற்றுக்கொள்வதும் அதைக் குறித்து சிந்திப்பதும், நம் கண்களில் காணப்படாத ஆவிக்குரிய காரியங்களை கற்றுக்கொள்வதற்கு முக்கிய அம்சங்களாய் இருக்கின்றன. உலகப் பிரகாரமான காரியங்களை கற்றுக்கொள்ளுகின்ற முறையிலே தான் ஆவிக்குரிய காரியங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த விதமாக கற்றுக்கொள்ளும்படியாக தான் தேவன் நமது மூளைகளை “உருவாக்கியிருக்கின்றார்.” ஆயினும் ஆவிக்குரிய காரியங்களுக்கு **மூலக்காரணமும், சேகரிப்பு முறையும்** வித்தியாசப்பட்டிருக்கின்றன.

வேதாகமத்திலுள்ள தேவனுடைய வார்த்தை மூலமாக அவர் நம்மிடம் பேசுவதை கவனித்தால் மட்டுமே நம்மால் ஆவிக்குரிய காரியங்களை கற்றுக்கொள்ள முடியும். தேவனுடைய வார்த்தைகளில் அவர் தெரிவித்துள்ள காரியங்களை விட அதிகமாக மனுக்குலத்துக்கு எதுவுமே தெரியாது. *மத்தேயு 16:23; 2 கொரிந்தியர் 3:5.* பரிசுத்த ஆவியானவர் மூலமாக அவருடைய வார்த்தை நமக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு உண்டாயிருக்கிறது; ஆகையினால், இந்தத் தகவல் தேவனுடைய மனதில் இருந்து வந்ததாக இருக்கின்றது. தேவனுடைய ஆவியானவருக்கு தேவனுடைய மனதைப் பற்றித் தெரியும். “ஆவிக்குரிய சத்தியங்களும்





ஆவிக்குரிய வார்த்தைகளும்” இடம் பெற்றுள்ள வேதாகம செய்தியை அவரே நமக்குத் தந்திருக்கின்றார். எல்லா மக்களுக்குள்ளும் விசுவாசத்தை உருவாக்கும்படியாகவே தேவனுடைய வார்த்தை எழுதப்பட்டது; அதனால், ஒரு சிலர் மாத்திரமல்ல எல்லா ஜனக்கூட்டத்தாரும் அதைப் புரிந்துகொள்ள முடியும். கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியான வருடன் பெற்றுள்ள ஐக்கியத்தின் மூலமாக இந்த ஆவிக்குரிய சத்தியங்களையும், வார்த்தைகளையும் புரிந்துகொள்ள முடிகிறது. சிந்திக்கவும், கற்றுக்கொள்ளவும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு அதிகாரம் அளித்திருப்பதால் இது **சாத்தியமாகவில்லை,** நாம் பரிசுத்தராய் இருப்பதனால் சாத்தியமாகிறது; ஆகையினால், இந்த சத்தியங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய ஆவிக்குரிய மனதை நாம் பெற்றிருக்கிறோம். நமக்கு கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. பார்க்கவும் *1 கொரி. 2:10-16.* சுத்திகரிக்கப்படாத ஒருவன் பரிசுத்த ஆவியானவருடன் ஐக்கியமாக இருக்க முடியாது. அதுமட்டுமல்ல அவனால்/அவளால் ஆவிக்குரிய போதனைகளை புரிந்துகொள்ளவும் முடியாது. தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிற ஆவிக்குரிய காரியங்கள் நம் வாழ்வுக்கு அதிகாரம் அளிக்கின்றன. *1 கொரி. 4:20.* தேவனுடைய ராஜ்யத்தில் நாம் பெற்றிருக்கிற குடியிருப்பு நமக்கு பெலனாக இருக்கின்றது. *பிலி. 3:20.*

“அதற்கு இயேசு : நானே **வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக் கிறேன்**” என்றார். *யோவான் 14:6.* யோவானுடைய முன்னுரையில் நமக்குள்ள தொடர்பின் மீது நமக்கு விசுவாசம் இல்லாவிட்டால், தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்தில் நமக்கென்று இருக்கின்ற இடத்தைப் பற்றி புரிந்துகொள்வது கடினமாக இருக்கும். எவனொருவன், தேவனுடைய மகன் என்ற தன்னுடைய அடையாளத்தின் மீது விசுவாசம் இல்லாதிருக்கிறானோ, அவனால் ராஜ்யத்தைப் பற்றி இயேசு போதித்ததை புரிந்துகொள்ள முடியாது. தேவனுடைய ராஜ்யம் ஒன்றிருக்கிறது என்று

மக்களை நம்பச் செய்வதற்காக இயேசு கடுமையாக பாடுபட்டார். தேவனுடைய உன்னதமான ராஜ்யத்தைப் பற்றி எல்லாவற்றையும் விளக்கும்படி இயேசு முயற்சிக்கவில்லை. எல்லாவற்றையும் அவர் விளக்கியிருந்தாலும் கூட நம்மால் புரிந்துகொண்டிருக்க முடியாது. மோசே, இஸ்ரவேலரிடம் சொன்னது போல நமது பிதாவின் ராஜ்யத்தில் நமக்கென்று இருக்கின்ற இடத்தைப் பற்றி நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டுமோ அதை அவர் போதித்தார். *உபாகமம் 29:29.* நாம் பயன்படுத்துகின்ற பொருட்கள் தேவனுக்கு சொந்தமானவைகள், மனிதனுடைய ஆவியும் தேவனிடமிருந்து வந்தது தான். ஆனபடியினால், எல்லாருக்கும் தேவனிடத்தில் இடம் இருக்கின்றது. பார்க்கவும் *லூக்கா 16:10-12.* தேவனுக்கு சொந்தமானவற்றில் நாம் உண்மையுள்ள உக்கிராணக்காரர்கள் என்று தீர்க்கப்படாவிட்டால், நாம் பெறுவதற்கு உரிமைப் பெற்றுள்ள எந்த நன்மையையும் நம்மால் பெற முடியாது. பார்க்கவும் *லூக்கா 16:1-15.*

தேவனுடைய ராஜ்யத்திலிருந்து தேவனை தனியாக பிரித்தெடுக்க முடியாது; ஆகையினால், தேவனை நம்புவது அவருடைய ராஜ்யத்தை நம்புவதாகவே இருக்கின்றது. *1 தீமோத்தேயு 6:15,16.* தேவன் நமக்கு கொடுத்துள்ள உரிமையோடு தொடர்புடைய ராஜ்யத்தைக் குறித்த பார்வையை வெளிப்படுத்த இயேசு வந்தார். நமது ஆவிகள் தேவனிடமிருந்து வந்தவைகள், அவைகள் அவரிடமே திரும்பிப் போக வேண்டியவைகள். தேவனுடைய குடும்பத்தை இயேசு மகிமையில் கொண்டு வந்து சேர்க்கும்படி அவர் காத்துக்கொண்டிருக்கிறார். *எபிரெயர் 2:10.* இதன் காரணமாக இயேசு மிகவும் கவனமாக செயல்பட்டு கிறிஸ்தவர்கள் தேவனுக்கு உகந்த வாழ்க்கைக்குள்ளாக வளர்ச்சி பெறும்படி தேவனுடைய ராஜ்யத்துக்குரிய வாழ்க்கை முறையையும், கொள்கைகளையும் முன் வைத்தார். *மத்தேயு 5:48; 1 யோவான் 4:16.* கிறிஸ்தவர்கள் இயேசுவை





தங்கள் வாழ்வின் ஒளியாக ஏற்றுக் கொண்ட பிறகு அவருடைய உவமைகள் தேவனுடைய ராஜ்யத்துக்குள்ளான அவர்களுடைய வாழ்வுக்கு தனிப்பட்ட முறையில் அர்த்தம் தருபவையாக இருக்கின்றன. ஜீவப்பிரமாணத்தை போதிக்கும்படி இயற்கை நியதியை பயன்படுத்தி அவர் சொன்ன உவமைகள் சிலவற்றை இந்தப் பாடத்தின் முடிவில் நாம் ஆராய்ந்து பார்க்கப்போகிறோம். உவமைகளை பற்றி முழுமையாக கற்றுக்கொள்வதற்கு "இயேசுவின் உவமைகள்" என்ற தலைப்பில் உள்ள புத்தகத்தைப் பாருங்கள். இது என் இணையதளத்திலும் உள்ளது.

இயேசுவானவர், ராஜ்யத்தைப் பற்றி போதித்துக்கொண்டு சென்ற போது, அநேக உவமைகளை அவர் பயன்படுத்தினார். தயவு கூர்ந்து வாசிக்கவும் *மத்தேயு 13:3-9,* (மாம்சத்துக்குரிய உலகத்திலுள்ள இயற்கை நியதியை மக்கள் புரிந்துகொண்டார்கள்) *18-23,* (ஆவிக்குரிய ராஜ்யத்திலுள்ள ஜீவப்பிரமாணத்தை இயேசு போதித்தார்) பார்க்கவும் *லூக்கா 8:4-8,11-15.* வயல்வெளியில் பயன்படுத்தப்படும் டிராக்டர் உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே, விதையையும் மண்ணையும் குறித்த இயற்கை நியதியை உலக மக்கள் பெரும்பாலானோர் புரிந்து கொண்டார்கள். சில பெரிய நகரங்களிலுள்ள மக்களுக்கு ஒரு வேளை அதைக் குறித்து இன்றைக்கு பாடம் நடத்த வேண்டி இருக்கலாம். ஆனால் விதையைப் பற்றியும், மண்ணைப் பற்றியும் கற்றுக்கொள்வது அவர்களுக்குக் கடினமாக இருக்காது. "ராஜ்யத்தின் வசனம்" என்ற சொற்றொடரை *13:19ஆம்* வசனத்தில் மத்தேயு பயன்படுத்தி ஜனங்களுடைய வாழ்வின் ஒரு பகுதியாக இருக்கின்ற ஆவிக்குரிய வாழ்க்கைக்கென்று அவர்களுடைய மனங்களில் விதைக்கப்படுகிறது என்னவென்று விவரிக்கின்றான். *லூக்கா 8:11*ஆம் வசனத்தில் "விதை தேவனுடைய வசனம்" என்று லூக்கா சொல்லுகிறான். ஆகையினால்

பெரும்பாலும் அல்லது எப்பொழுதும் இயேசு போதித்தது எல்லாம் தேவனுடைய ராஜ்யத்தை பற்றியதாகவே இருந்தது; ஏனெனில் அவர் தேவனுடைய வசனத்தையே எப்பொழுதும் போதித்தார். *யோவான் 7:16.* அதாவது, எப்படி “தேவனுடைய வசனம்” வேதாகமத்தில் ஒரு தலைப்பாக இல்லையோ அது போலவே தேவனுடைய ராஜ்யம் என்பதும் ஒரு தலைப்பாக மாத்திரம் இருப்பதில்லை. மனுக்குலத்துக்கு தேவன் தந்தருளிய அவருடைய வசனத்தின் முன்னுரையாக இருப்பதே தேவனுடைய ராஜ்யம் தான். இந்த புத்தகத்தின் முன்னுரையை பார்க்கவும்.

வயதில் பெரியவர்களாக இந்த உலகில் இருக்கிற மக்கள் யாவருமே இயேசு தமது உவமையில் முன்வைத்த நான்கு வித்தியாசமான நிலங்களில் ஒன்றைப் போலத் தான் இருக்கிறார்கள் என்ற உண்மையை ஏற்றுக் கொண்டாலே, ராஜ்யத்தைப் பற்றிய அறிவை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இயேசு ராஜ்யத்தைப் பற்றி போதித்துக்கொண்டு சென்ற போது, அவர் போதித்த தேவனுடைய வசனமே விதையாக இருக்கின்றது. கிறிஸ்தவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கென்று அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய தேவனுடைய ராஜ்யத்தின் கருத்தானது கற்றுக்கொள்வதற்கு இவ்வளவு எளிதாக இருக்கின்றது. நாம் நிலமாக இருக்கிறோம், விதை நல்லதாக இருக்கின்றது. அதனால் நமது ஆவிக்குரிய வளர்ச்சியிலும், கனி கொடுப்பதிலும் பிரச்சனை இருக்குமானால், நம்மைத் தான் நாம் சோதித்துப் பார்க்க வேண்டும். நாமே நிலமாக இருக்கின்றோம். பிரச்சனையானது நிலத்தினாலும், முதல் மூன்று வகையான நிலங்களில் ஒரு வகையைச் சேர்ந்த நிலத்தினால் உருவாகிவிட்ட வாழ்க்கைப் பெட்டி என்ற சூழ்நிலையாலும் தான் உருவாகும். நாம் நம்மை சரிப்படுத்திக்கொள்ள முடியும். ஆனாலும் தேவனுடைய ராஜ்யம் என்ற “வாழ்க்கைப் பெட்டிக்கு” நாம் மாற்றப்படவேண்டியது அவசியம். இயேசு அவர்களை நோக்கி “இந்த உவமையை நீங்கள்





அறியவில்லையா? அறியாவிட்டால் மற்ற உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?” என்று கேட்டார். *மாற்கு 4:13.*

“மலை பிரசங்கம்” என்ற குறிப்பிடப்படுவதும் *மத்தேயு 5-7* அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளதுமான பிரசங்கமானது தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கின்ற மனிதனைப் பற்றி தெரிவிக்கின்றது. இந்த நீண்ட பிரசங்கத்தைப் பற்றி முழுமையாக கற்றுக்கொள்வதற்கு இந்த பாடத்தில் நமக்கு இடம் போதாது. “மலைப் பிரசங்கம்” என்ற தலைப்பிலுள்ள எனது புத்தகத்தை தயவு கூர்ந்து வாசியுங்கள் அல்லது எனது இணையதளத்தில் பாருங்கள். இதே பிரசங்க அமைப்பினை லூக்கா சுவிசேஷ புத்தகத்திலும் நாம் பார்க்க முடியும்.

தேவனுடைய ராஜ்யத்தில் பிள்ளைகளாக இருக்கும்படி அவர் நம்மை படைத்திருக்கிறார் என்று கிறிஸ்தவர்கள் புரிந்துகொண்ட பிறகு, அவர் நம்மை படைத்திருக்கின்ற விதத்தோடு, ராஜ்யத்துக்கேற்ற வாழ்க்கை எப்படி தொடர்புடையதாக இருக்கின்றது என்று அறிந்துகொள்ளவேண்டும். இயேசுவுக்குள் **ஜீவன்** இருக்கிறது. அந்த ஜீவன் நமது வாழ்வுக்கு ஒளியாக இருக்கிறது. ராஜ்யத்தின் கருத்தை கற்றுக்கொள்வதும், நம்புவதும் கடினமான காரியங்கள் அல்ல. அதை நம்புவது ஒரு பிரச்சனையும் அல்ல. இந்தப் பூமியில் நாம் வாழும் வாழ்க்கையும், நம்முடைய மரணத்திற்குப் பிறகு வாழும் வாழ்க்கையும் நிறைவான வாழ்க்கையாக இருக்கும்படி, நாம் நம்புகின்ற காரியத்தை முழுமையாக சார்ந்திருப்பதில் தான் பிரச்சனை இருக்கின்றது. பக்தியுள்ள மக்கள் எதிர்கொள்ள விரும்பாத சவாலாக இது இருக்கலாம். ஆகையினால், தேவனுடைய ராஜ்யத்தை பற்றி கற்றுக்கொள்ள அவர்களுக்கு விருப்பமில்லாமலும் இருக்கலாம்; அநேகர் ஞானஸ்நானத்தைப் பற்றியும் தொழுகையைப் பற்றியும் மாத்திரமே தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். மற்றவர்களுக்கு, “நான் இயேசுவை நம்புகிறேன்'' என்ற அளவோடு நின்று விடுகின்ற ஒரு மார்க்கம்

வேண்டியிருக்கிறது. நாம் நம்புவதை முற்றிலும் சார்ந்துகொள்வது தான் விசுவாசம். நாம் தேவனுடைய புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டால், விசுவாசம் உருவாகின்ற இந்த செயல் வாழ்நாள் முழுவதும் நடைபெறும். *எபிரெயர்10:16.* “அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்” என்று இயேசு சொன்னார். *யோவான் 7:17.* எல்லாரும் தாங்கள் தேர்ந்தெடுக்காத “பெட்டிக்குள் பிறந்தவர்களாய்” இருப்பதினால், வயதில் பெரியவர்களாய் இருக்கின்ற நாம், நம்மைக் குறித்த தேவனுடைய சித்தம் என்னவோ அதன் மீது விசுவாசம் வைக்க முடிவு செய்ய வேண்டும்.

தேவனை முழுமையாக சார்ந்திருக்க நாம் முடிவு செய்யவில்லையென்றால், பொல்லாங்கன் “மனிதர்களை” வைத்து ஏற்படுத்தியிருக்கின்ற காரியங்களின் மீது நாம் விசுவாசம் வைத்துவிடுவோம். *மத். 13:24-30, 36-43* வசனங்களை தயவுகூர்ந்து வாசியுங்கள். இந்த உவமையில் தேவனுடைய ராஜ்யமானது பரலோகத்தை மட்டுமல்ல, அவருடைய சிருஷ்டிப்பு எல்லாவற்றையுமே உள்ளடக்கியதாக இருக்கின்றது. தேவன் கிறிஸ்தவர்களுக்கு பிதாவாயிருக்கிறார் என்றும், நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்றும், ராஜ்யத்தைப் பற்றிய தமது போதனைகளில் இயேசு தெளிவாக உறுதிபடுத்துகிறார். *மத்தேயு 5:9; மாற்கு 3:33,34; லூக்கா 6:35.* இந்த மாம்சத்திற்குரிய உலகத்திலுள்ள எல்லா சிறுபிள்ளைகளுமே தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்களாயிருக்கிறார்கள். *லூக்கா 18:16,17.* இயேசுவின் பிரசங்கத்தை ஏற்றுக்கொள்ளாத மக்களுடைய வாழ்க்கையில் சாத்தான் கிரியை செய்து, மனிதர்களுக்குள் தேவன் வைத்திருக்கின்ற இயல்பான தேவைகளை திருப்திப்படுத்தும்படி பல ஏற்பாடுகளை செய்கின்றான். சிறுபிள்ளைகளானவர்கள் ‘‘நன்மை தீமை அறிந்துகொள்ளும்’’ பொறுப்புணர்ச்சியை





அடைகின்ற வரை ‘‘பொல்லாங்கன்’’ அவர்களை தொட முடியாது. தேவனுடைய பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கும்படி அவர் இயேசுவுக்கு நியமித்துள்ள ‘‘தேவனுடைய ஆளுகையின் அதிகார வரம்பினை” இயேசுவின் உவமை முன் நிறுத்துகின்றது. இந்த அதிகார வரம்பு உலகத்திலுள்ள மக்களையும் உள்ளடக்கியதாகவுள்ளது; தேவன் சர்வ வல்லமையுள்ளவராயிருந்தாலும் கூட, சாத்தானுக்கு ஒரு ராஜ்யத்தை அவர் அனுமதித்திருக்கின்றார். இயேசு நன்மை செய்கின்றவராயிருக்கின்றார். பிசாசு எதிராளியாயிருக்கின்றான். வயதில் பெரியவர்களாக இந்த பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதர்களிலிருந்து இந்த ராஜ்யங்களுக்கு குடிமக்களை சேர்ப்பது தான் மையப்பொருளாக இருக்கின்றது. *அப்போஸ்தலர் 26:18.* தேவனுடைய திட்டத்தின் முடிவினையும் இந்த உவமை வெளிப்படுத்துகின்றது. “அறுப்பு உலகத்தின் முடிவு.” *மத்தேயு 13:39.* தேவன் தம்முடைய பிள்ளைகளை தனியாக பிரித்தெடுப்பார், பிறகு மீதியாயிருப்பவர்கள் சாத்தானோடு கூட நித்திய காலமாக துன்பப்படும்படி அவனோடுகூட புறம்பே தள்ளப்படுவார்கள். மனுக்குலத்தை தேவன் படைத்ததுபற்றிய விவரத்தின் முடிவு இதுதான்.

“பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு **ஒப்பாயிருக்கிறது;** அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும் வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும்.” *மத்தேயு 13:31,32.* ஒரு எளிமையான இயற்கை நியதியை இயேசு தெரிவித்தார். தேவனுடைய ராஜ்யத்திற்கேற்ற ஆவிக்குரிய வாழ்க்கை தங்களுக்குள் இருப்பதை இயேசுவின் போதனையைக் கேட்டவர்கள் பார்க்கும்படிக்கு, அவர்கள் செய்யவேண்டியிருந்ததெல்லாம் ஒரே ஒரு காரியம் தான். அது என்னவென்றால், இந்த உவமையில் இரண்டு வார்த்தைகளில் மாற்றம் செய்யவேண்டியது, அவ்வளவுதான்.

நாம் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருந்தால், ''நிலத்தில்'' என்ற வார்த்தையை மாற்றி அந்த இடத்தில் நமது பெயர்களை சேர்த்துப்பார்க்க முடியும். நம்முடைய வாழ்வை வழிநடத்தும்படி "தேவனுடைய வசனத்தை" நாம் முழுமையாக அனுமதித்தப் பிறகு, ஆவிக்குரிய வளர்ச்சியால் ஏற்படுகின்ற மாற்றங்களையே, ஒரு மரத்தை உற்பத்தி செய்யுமளவிற்கு கடுகு விதையில் உண்டாகின்ற மாற்றங்கள் குறிப்பிடுகின்றன. ராஜ்யத்தைப் பற்றிய செய்தி புளித்தமாவிற்கு ஒப்பாயிருக்கின்றது. தயவு கூர்ந்து வாசிக்கவும் *மத்தேயு 13:33.*

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் காணப்படும் சம்பவங்கள் நடந்தபிறகு தான் மத்தேயு தனது சுவிசேஷ புத்தகத்தை எழுதினான். மறுபடியும் பிறந்திருந்த ஆயிரக்கணக்கான விசுவாசிகள் இயேசுவின் உவமையில் சொல்லப்பட்ட "மரமாக" மாறியிருந்தார்கள். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்த பிலிப்பு போன்ற கிறிஸ்தவர்கள் ராஜ்யத்தின் விதையை விதைப்பதற்கேற்ற நிலமாக அவர்களுடைய இதயங்களும் மனங்களும் மாறியிருந்தன. *அப்போஸ்தலர் 8:4,12; 1 கொரி. 3:5-17.* இந்த உவமைகள் தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி எளிதாக நமக்கு புரியவைப்பவையாக இருந்தாலும், ஒரு உறுதியான மரமாக ஆவது என்பது அவ்வளவு எளிதானதல்ல; அப்படியாவதற்கு அவசியமானவைகளை வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டு விடாமுயற்சியுடன் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்தாகவேண்டும். தயவுகூர்ந்து *எபிரெயர் 12:1-14* வசனங்களை கவனியுங்கள்.

இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் ஊழியம் செய்கிற ஒரு சுவிசேஷகனுடைய "பார்வையில்" "ராஜ்யம் எதை போலிருக்கிறது" என்பதை இயேசு வெளிப்படுத்தினார். அவன் அல்லது அவள் விதையை விதைக்கிறான் / விதைக்கிறாள். தயவுகூர்ந்து *மாற்கு 4:26-29*





வசனங்களை வாசியுங்கள். ''பிரசங்கமேடையிலிருந்து பிரசங்கம் செய்யும்'' செயல் ஒரு சுவிசேஷகன் செய்கின்ற வேலையோடு சீரான தொடர்புடையதாயில்லை. "திரிந்து" என்ற வார்த்தை இங்கு இல்லாமற் போகிறது. பார்க்கவும் *அப்போஸ்தலர் 8:4.* தேவனுடையதும் அவருடைய குமாரனுடையதுமாயிருக்கிற ராஜ்யத்திற்கென்று நமது ''விசுவாசக் கதவினை'' திறப்பதற்கு உதவி செய்யக்கூடிய இன்னும் அதிகமான இயேசுவின் பாடங்கள் சுவிசேஷ புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. சுவிசேஷ புத்தகங்களை நம்முடைய பிரயோஜனத்திற்கென்று வாசிக்கும்படி நம்மை உற்சாகப்படுத்துவதே இந்த பாடத்தின் ஒன்றாம் பாகம் மற்றும் இரண்டாம் பாகத்தின் நோக்கமாயிருக்கிறது. தேவனுடைய ராஜ்யத்திற்கென்று நமது ''விசுவாசக்கதவினை'' தொடர்ந்து விரிவாகத் திறக்கும்படிக்கு பின்வருவனவற்றை நம்முடைய மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டை நாம் வாசிக்கின்ற விதத்தில் நல்ல மாற்றத்தை உண்டாக்கும்படி வரிசையாக அமைந்துள்ள சிந்தனைகளாக இவைகளிருக்கின்றன. பின்வருகின்ற ஜீவனுக்கேற்ற கொள்கைகளின் மீதும், இந்த புத்தகத்தில் முன்னதாகக் குறிக்கப்பட்ட வரிசையான தலைப்புகளின் மீதும் நமக்கு இருக்கின்ற தனிப்பட்ட விசுவாச அளவை பொறுத்தே, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த இயேசுவின் போதனையை நாம் வாசிக்கின்ற விதமும் அமைந்திருக்கும்.

தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும்படியாக எல்லாரும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு தேவனுடைய குமாரனுக்கு இயேசுவே ஜீவனாயிருக்கிறார், ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்வுக்கும் அவரே ஒளியாயிருக்கிறார்.

ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிப்பதின் மூலமாகவும், அதற்கேற்ற வாழ்க்கையை வாழ்வதின் மூலமாகவும், விசுவாசிக்கிறவர்களுக்கு இந்த ஜீவனை வெளிப்படுத்துவதற்காகவே அவர் வந்தார்:

“அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.” *யோவான் 1:12,13.*

மேலே சொல்லப்பட்ட தேவனுடைய நோக்கத்தின் காரணமாகவே, கிருபையையும், சத்தியத்தையும் இயேசு மனிதகுலத்திற்குக் கொண்டுவந்தார். *யோவான் 1:17.*

இயேசு சிலுவையில் மரிக்க வேண்டிய நேரம் வந்தபோது, அவர்: “இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார்.” *யோவான் 12:27,28.*

இயேசு தமது பொதுவான ஊழியத்தை ஆரம்பித்த போது, அவர்: “நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன்” என்று சொன்னார். *லூக்கா 4:43.*

மனிதகுலத்தை தேவன் படைத்ததற்கான அவருடைய நோக்கத்திற்கும், அவருடைய கிருபைக்கும் இடையில் நாம் சமநிலையை வைக்க வேண்டியது அவசியம். அவருயை குமாரன் சிலுவையில்





அறையப்பட்டார்; ஏனெனில் சிருஷ்டிப்பைப் பற்றிய அவருடைய நோக்கம் நிறைவேறுவதற்கு இது அவசியமாயிருந்தது. பார்க்கவும் *2 தீமோத்தேயு 1:8-12.*

தமது குமாரன் மனுக்குலத்தின் பாவத்திற்காக சிலுவையில் மரிக்கும்படி அவரை அனுப்பவேண்டுமென்பது சிருஷ்டிப்பைப் பற்றி தேவனுடைய நோக்கமல்ல. இயேசுவானவர் அநேக பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்பதே சிருஷ்டிப்பை பற்றிய அவருடைய நோக்கமாயிருக்கிறது. *எபிரெயர் 2:10.* தற்பொழுது விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் “மகிமையின் மேல் மகிமை” அடையும்படியாகவும், நமக்கென்று இயேசு கிறிஸ்து திரும்பவருகிற போது, “மகிமையும், கனமும், சமாதானமும்” நமக்கு உண்டாகும்படியாகவும், இயேசுகிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும், தேவனோடு இணைந்து முழு மூச்சாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். *2 கொரிந்தியர் 3:18; 13:14; ரோமர் 2:10; 1 தெசலோனிக்கேயர் 4:15-18.*